உ

கடவுள் துணை.

நாடார் குலாபிமானிகள்

# நற்றமிழ்த் திலகம்.

முதற்பாகம்.

இஃது

சின்னக்காளாம்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ களம்

வே. பெ. மாரிமுத்து நாடார் அவர்கள்

கனிஷ்ட புத்திரரும்

ஷை யூர் மகா-ா-ா-ஸ்ரீ களம்

தமிழ்நேமி கு. பெ. அ. தங்கச்சாமிக் கவிராயர்

அவர்கள் பிரதம மாணாக்கருமான

வித்வ ரத்னாகரம்

ஸ்ரீமான் பெ. மா. வெள்ளைச்சாமி பாண்டியன்

அவர்களால் இயற்றியதை

---


மதுரை,

புதுமண்டபம் புஸ்தக வியாபாரம்

கு. இராமசாமிக் கோனார்

அவர்களால்

மதுரை, வடக்குமாசிவீதி,

ஸ்ரீ ராமச்சந்திர விலாஸ் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1922.



காப்பிரைட் ரிஜிஸ்டர்டு. [அணா 4.



Y592N
N22
125919

உ

கடவுள் துணை.

நாடார் குலாபிமானிகள்

# நற்றமிழ்த் திலகம்.

## கடவுள் வாழ்த்து.

விருத்தம்.

திங்கட்ன்மரபிற் ருேன்றித் திகழ்குலவிருத்திக்காகச்
சங்கமோன்றமைத்துமேலாந் தன்மைகோட்லேவர்கண்மீ
திங்கிதமுறவேகீத மிங்கேடுத்தியம் பச்சோதித்
துங்கநற்பரன்ரு ளேந்தன் சிரசினிற்சூட்டினேனுல்.

தோரணக்கல், மகாகனம் சென்ட்லார்ட்
பிஷப் Y. S. அஸரியா L. L. D. அவர்கள்.

(துலங்கு செம்பொன் என்ற மெட்டு.)

இராகம் செஞ்சுருட்டி] [தாளம் ஆதி.

கண்ணிகள்.

1 சிறந்த வம்பர வுலகசி ருஸ்டி
செய்தேவ லுக்குகந்த
சென்ட்லார்ட் பிஷப்பஸரியா பட்டாபிஷேக
சென்ட்லார்ட் பிஷப்பஸரியா

2 கறங்கி மின்கிழ ரெழின்மழை பொழிகிற
காரார்காத் தோரணக்கல்
கம்லார்ட்பிஷப் பஸரியா பட்டாபிஷேக
கம்லார்ட்பிஷப் பஸரியா

3 நினைந்தி யேசு கிறிஸ்துவினடிதொழும்
நீதானந்தம் பொருந்தும்
நேலார்ட்பிஷப் பஸரியா பட்டாபிஷேக
நேலார்ட்பிஷப் பஸரியா

4 மனங்க ளிந்தவை கூடியநாடார்
மாராமீற்றிங்கிக் கெல்லாம்
மன்லார்ட் பிஷப் பஸரியா பட்டாபிஷேக
மன்லார்ட் பிஷப் பஸரியா

5 நலம் பிறங்கிய யிங்க்லீஷ் பாஷையில்
யல் யல் டி கற்றுயர்ந்த
நம்லார்ட் பிஷப் பஸரியா பட்டாபிஷேக
நம்லார்ட் பிஷப் பஸரியா

6 துலங்கு தங்கம் வெள்ளைச்சாமி
சொல்பாமாலை புனைந்த
தூலார்ட் பிஷப் பஸரியா பட்டாபிஷேக
தூலார்ட் பிஷப் பஸரியா

அநுபல்லவி.

அறஞ்செறி யாகம மறிந்தசெம் பிரான்
அவனியினரசரினருகமர் தீரன்
வரந்தருகடவுளை வணங்குசிங் காரன்
மதிமிகுநாடார் மரபிலு தாரன்
வாழி நீடூழி வாழியே
வாழி வாழியே

## பிறையார் ஸ்ரீமான் ராவ்பகதூர் த. இரத்தினசாமி நாடார்

நாடார் மகாசன சங்கச் சாஸ்வதத்தலைவர்.

(பாலாபிஷேகப் என்றமெட்டு.)

இராகம் சிந்துபைரவி] [தாளம் சாப்பு

பல்லவி.

நாடார்களீடேற மார்க்கத்தைநாட்டிய
ரத்னசாமியெனுங் கற்பகமே

அநுபல்லவி.

கோடீஸ்பரனுரை கோடா வனப்புள
கோமகனுலுண்டு நற்சுகமே (நா)

தொகையரு.

கோதிலா மதுர வாக்யன்
குலநலம் புரிசி லாக்யன்
நீதிப்ர சங்க யோக்யன்
நிச்சயங் கொள்ளு மைக்யன்

சரணத் தொடர்

குதுகுல மொடுமுறை கூறுப தேசன்
கொடியவ ரிடம்பழ காத விஸ்வாசன்

பல்லவி எடுப்பு

குற்றமில்லா நடைகற்றவி வேகன்
கொற்றவன் ராவ்பகதூர்ப் பெயரோன் (நா)

தொகைரு

பிரதமக் காளப்ரெஞ்சு பெறியோர்களாய்ச் சேர்ந்து
பிறையாற்றிலே கூட்டினன்
பேதமை நீங்கிடக்கல்வி நயமோங்கிடப்
பெருமைதருநெறி காட்டினன்

சாணத்தொடர்.

பிறையெனும் படியது வளர்தலினாலே
பிரபலகீர்த்தி யுற்றேம் புவிமேலே

பல்லவி எடுப்பு.

பீடருமுத்தமிழ்த் தங்கம் வெள்ளைச்சாமி
பேசிக் கொண்டாடுங் குலோசிதனே (நா)

(அச்சாமோரீ லாகிமேல என்ற மெட்டு)

இராகம் தேசிக்கதோடி] [தாளம் ஆதி.

பல்லவி

சத்யாத்ன சாமிவு
தாரதீர வீரனே

அனுபல்லவி

வீரனே உப காரனே (ச)

சரணம்

வித்தியாசமின்றி நாடி
விளங்கு காண்ப்ரெஞ்சு கூடி
விதிகாட்டி மதிமூட்டி புகழ்நாட்டினுன் (ச)

பத்திரிகை யேற் படுத்தி
பாங்குபெறவே நடத்தி
பயம்போக்கி நயஞ்சேர்க்க செயல்தாக்கினுன் (ச)

பொன்னுல கமேபொருந்தும்
பொறையார் நகர்வி ளங்கும்
புண்யன்கா ருண்யன்லா வண்யன் கண்யன் (ச)

மன்னியகவிந்த்ர தங்கம்
மாவெள்ளைச்சாமிச் சிங்கம்
மதித்தேசம் மதித்தேகிதந் துதித்தோதிடுந் (ச)

பிறையார் ஸ்ரீமான் வெ. பாலகுருசாமி நாடார்
நாடார் மகாசன சங்கத்தலைவர்.

(மதீனமேமோரா என்ற மெட்டு)

இராகம் அமீர்க்கல்யாணி] [தாளம் ஆதி.

பல்லவி

பாலகுருசாமி ராஜ • பௌஷிகனே
ராஜ பௌஷிகனே
ராஜ பௌஷிகனே (பா)

அனுபல்லவி.

நாலோபன்யாசா நாடார்குலேசா (பா)

தொகையறு

சோலாகலம் பெற்ற நாடார் மகாநாடு
கூட்டும்ப்ராஸ் டெண்டுநீயே
கூட்டுறவுகொண்டுநற் காண்ப்ரெஞ்சுதோருநங்
குலநலஞ் செய்த சேயே

முடுக்குச்சந்தம்

கொம்பிரையார் முறையெங்கு மிலங்கும்
அம்பிறையார்நகர் வந்துவிளங்கும்
கோதரு சேதன
னேதனை மீதுயர்

பல்லவி எடுப்பு

கொற்ற வெள்ளைச்சாமிசொல்
நற்றமிழ் மாலைகமழ் (பா)

(பாவிகை பானுர்ஜிஹை என்ற மெட்டு)
இராகம் அமீர்க்கல்யாணி] [தாளம் ஆதி.

பல்லவி.

பாண்டியக் கோன்குலச் க்ஷேமி பிறையார்வாழ்
பாலகுருசாமி
பூண்டவை ருக்யநன்னேமி என்ஞான்றும்
புகழ் பெருந்தேமி (பா)

தொகையறு

பரமகாருண்யனுய்க் குலநலஞ்செய்திடப்
பாரினிலுதித்த நல்லான்
பாரத மாதாவின் நேத்திரம் போன்றவன்
பட்சப்ரபட்ச மில்லான்

பல்லவி எடுப்பு.

பாக்கியசாலி விஸ்வாசன் முன்னேற்றம்
பண்ணுஞ்சுய ரோஜன் (பா)

தொகையறு

சங்கத்திலபிமானமுள்ளவன் கான்ப்ரெஞ்சிற்
றலைமைகொண்டாடு புண்யன்
தமிழ்நேமித்தங்கம்வெள் ளைச்சாமிபுகல்கின்ற
சங்கீதப்ரிய கண்யன்

பல்லவி எடுப்பு.

சாமுத்ரிகா லட்சணதேகன் மென்மேலுஞ்
சார்ந்தவை போகன் (பா)

## பட்டிவீரம்பட்டி ஸ்ரீமான் ஊ. பு. அ. மாரிமுத்து நாடார்

நாடார் மகாசன சங்க வைஸ் பிரஸ்டெண்டு

(மஞ்சுநிகர் குந்தள மின்னே என்ற மெட்டு)

இராகம் சுருட்டி] [தாளம் ரூபகம்

கண்ணிகள்

பட்டிவீரம் பட்டியில் வாசன் பாக்கியவாளன் யோக்கியசீலன்
பக்தன் மாரிமுத்தெனும் போஜன் இந்த
பாரகத்தினி லேயிவற்கெதி
ராரெனச்சொல வேமிகுத்தொளிர்
பங்கயமலர் முகத் தேஜன் பாகுசர்க்கரை யேநிகர்த்திட
பண்புடன் செய்யு முபன்யாசன்.

நட்டியநாடார் மகாஜன சங்கத்தினின்று வைஸ்ப்ரஸ்டெண்டு
நற்பதவி பெற்றுலோசனைக் கர்த்த
ஞனதீரப ரோபகாரகு
பேரனுமுயர் காபிதேயிலை
நல்லமலைக் கோதிகாரி வெள்ளைச்சாமிசொல் லுள்ளத்தேகொள்
நாயகமதாய விஸ்தாரி [ளும்

பட்டிவீரம்பட்டி, ஸ்ரீமான்

ஊ. பு. அ. செளந்தரபாண்டிய நாடார் M. L. C,

கவர்னர் கௌண்சில் மெம்பர்

(தெள்ளுமயிலுக்குதவு என்ற சிந்து மெட்டு)

இராகம் செஞ்சுருட்டி] [தாளம் ஆதி·

கண்ணித் தொடர்.

சமர்த்தர்மதித்திடுங்கெம் பிரன் திருச்
செளந்தர பாண்டியசிங் காரன் நாடார்
சத்திரிய ரின்குலத்தி
ரத்தினம தாகியவு
தாரன் வெகு சீரன்

கமழுங்களபப் புய னிம்பர் உயர்
கவர்னர்கௌண்சில்களின் மெம்பர் நனி
கற்றவற்கு மற்றவற்குங்
கொற்றவர்கட் குங்கொடுக்குங்
கையன் கவின் மெய்யன்

பட்டிவீரம்பட்டிவளர் ஸ்ரீமான் செல்வம்
பாக்கியஞ் சந்தோஷநிறை பூமான் நம்மைப்
பண்புபெறச் சீர்திருத்த
நண்புடன் முயற்சை செய்யும்
பாசன் உபன் யாசன்

நட்டியநாடாரின் மகா சங்கம் எந்த
நாளுந்தழைத்தோங்குபிர சங்கம் செய்து
நன்மைபுரிந் தேயெவர்க்கு
முண்மைமொழியே பகரும்
நாவன் உயர் பூவன்

திங்கட் செழுங்குடை மகீபன் அஷ்ட
திக்கும் விஜயாதிபிரஸ் தாபன் மிகு
தெருள்பலவு முணர்ந்த

கிருபைதயை நிறைந்த
சீலன் அனு கூலன்

சங்கப் புலவர்மெச்சுந் தேசன் மணித்
தங்கம் வெள்ளைச்சாமிக்கவி ருசன் நவில்
தமிழுநனி சுரும்ப
ரியிரலருந் கலந்த
தாமன் சுப சேமன்

(பங்காயிலாலே ஜாரீரா என்ற மெட்டு.)

இராகம் இந்துஸ்தான் பியாக்] [தாளம் ஆதி

பல்லவி.

சௌந்தர பாண்டியனே
சம்ப்ரம ஸ்ரீமான் (சௌ)

அநுபல்லவி.

மைந்துமிகுஞ் சீரன் மதுரப்பாசங்கதீரன்
சொந்தம் பாருட்டுமொய்யாரன் சோபிதமாரன் (சௌ)

சரணம்.

தங்குலத்திலுரிமை சாரச்செய்தானருமை
எங்கும்விளங்குமொருமை யேந்தும் பெருமை (சௌ)

சங்கத்திலுபகாரன் சட்டசபைக்கதிகாரன்
பொங்கும்பௌஷிககுபேரன் புண்யாவதாரன் (சௌ)

தங்கம்வெள்ளைச்சாமிசொல் தமிழ்க்குதவியவள்ளல்
பங்கமில்லாதகுரிசில் பாரதனில் (சௌ)

## அருப்புக்கோட்டை தர்மஸ்தாபன போஜன்
## ஸ்ரீமான் மு. முத்துச்சாமி நாடார்

(அமாரநபி என்ற பின் முடுகு மெட்டு)

இராகம் செஞ்சுருட்டி] [தாளம் ஆதி

பல்லவி.

முத்துச்சாமி சத்ய
மூர்த்தி ப்ரஜானுகூலன் (மு)

அநுபல்லவி.

முத்துச்சாமி தெய்வீகப்
பக்திச்சேமி யத்வீத (மு)

சரணம்.

நேர்த்தியானசொருபன் நிபுணத்துவமகீபன்
நேசப்புனிதவி லாசச்சுகிர்தவிஸ்
வாசத்தொடுகுல மாசற்றிடவரு (மு)

தொகையறு.

செவ்வையாய்க் குலநலத் தன்மைதனைநிறுவிய
ஜீவகாருண்ய சித்தன்
ஜெகமெங்கனும்பணியு மமுதலிங்கேஸ்பரன்
தேவாலயதர்ம கர்த்தன்

ஷ சரணம் எடுப்பு

சிராருப்புக்கோட்டை யூரில்வாழ்வோன்சிரத்தை
சேரற்புதநெறி கூறிச்சுயநலம்
ஆர்வத்தொடுபுரி நேர்மைப்பிரபல (மு)

தொகையறு.

ஞாபகச் சின்னமாய் வாசகச்சாலையை
நாட்டினன்ஜெப மோங்கவே
ராஜவிசுவாசமே கைக்கொண்டொத்துழையாமை
யமனைவென்று னீங்கவே

ஷ சரணம் எடுப்பு

நாளுங்கொண்டாடுந்தங்கம் நம்வெள்ளைச்சாமிச்சிங்கம்
ராகத்தமிழ்புனை வாகுப்புரவல
ஞேகைக்குறிபலெள் ளீகப்பெரியவன் (மு)

பிரகாசபுரம் ஸ்ரீமான் **J. M.** குலசேகரராஸ் மதருவ்ஸ்.
(பாராமுகமேனய்யர் என்றமெட்டு)

இராகம் இந்துஸ்தான்பியாக்] [தாளம்ஆதி

இடைத்தொகைரு

பல்லவி

ஸ்ரீமான் குலசேகரராஜ் சென்ஸஸ்குழைத்த (ஸ்ரீ)

அநுபல்லவி.

பூமானுங்கிலத்தினி லேமாபாண்டித்யமுள்ள
கோமான்குலாசாரத்திற் கேமாசகற்றுமாத்ம
போதன் உயர்ந்தபிரக்
யாதன் முறைதவரு
நீதன் சிறந்திடுமெத்
வீதன் சென்ஸஸ்குழைத்த (ஸ்ரீ)

தொகைரு

சீரற்றகுலநலஞ் செம்மைபெறமென்மேலுஞ்
சீர்திருத்தஞ்செய் புண்யன்
சென்னையம்பதியிலே கவர்னர்துரைபோடுபல
தீர்மானஞ்செய்த கண்யன்

அநுபல்லவி எடுப்பு.

ஜெயமுடன்நாடார்சத்தி ரியரெனவேயுயர்த்தி
நயமொடென்னாளும்வைத்த தைரியவான்சத்திய
சீலன் குலத்திற்கனு
கூலன் செவ்வியதிருக்
கோலன் சம்ப்ரமசுக
லோலன் சென்ஸஸ்குழைத்த (ஸ்ரீ)

தொகைரு

நலமுடன் மதுரைவிக் டோரியாஹாலிலே
ரம்யப்ரசங்க தீரன்

லார்ட்ரீடிங்பிரபு மேன்மையொடுதந்திட்ட
சபிப்பட்டம் பெற்றவீரன்

அநுபல்லவி எடுப்பு

நாடார்குலவரலா றுணனூல்செய்திறலான்
கோடாமுறைபிறளான் குலாபிமானச்செயலான்
கூடும் கல்விப்ரசங்கம்
நீடும் வெள்ளைச்சாமிசொல்
நாடும் எலக்ஸனிலன்
போடும் சென்ஸஸ்குறைத்த (ஸ்ரீ)

மதுரை ஸ்ரீமான் கூ. மு. அ. வடிவேல்முருக நாடார்
நாடார் மகாஜன சங்காபிமானி கல்விஸ்தாபன போஜன்
(அடுக்குமல்லிகை என்ற மெட்டு.)

இராகம் செஞ்சுருட்டி] [தாளம் ஏகம்

கண்ணிக்தொடர்

நமக்கொரு கிழச்சிங்க மிருக்குது வடிவேல்முருக
நாமனன்னயமே பெருக்குது அன்னோன்முன்
னாட்களிருந் தாக்கியசுக
மார்க்கமதையென் வாக்கினிலொரு
நாவினாலெடுத்தோதமுடியுமே யானாலுஞ்சொல்வே
னாயிரத்திலோர்பாக முடியுமே (௧)

தொகையறா விருத்தம் மாதிரி

நங்குலத்தோர் முன்னேறக்கல்வியன்றிப் பிறிதொன்றால்
நடக்காதென்று
சங்கையறத்தெரிந்தினிய க்ஷத்ரியபாலன சபையைத்
தாபித்தேபின்
பங்கம்வரும்படி யெதிர்த்த சாதித்துவேஷப்பகையைப்
பக்ஷித்தேசேர்
தங்குவிருதையம்பதியிற் க்ஷத்ரிய வித்யாசாலை
சமைக்கச்செய்தோன் (௧)

ஷ கண்ணித்தொடர்

மணித்தங்கம் வெள்ளைச்சாமி சொற்பயனே அணிந்திலங்கி
மணங்கமழ்திறலான பொற்புயனே இந்த
மாதரைக்குளு தாரசத்திய
நீதநற்குண மேலிருத்தவன் (ந)

## விருதுபட்டி ஸ்ரீமான் ஏ. சி. பொன்னப்ப நாடார்

சுஜாதிபிமானி

(போதும் போதும்பந்த என்ற மெட்டு)
இராகம் இந்துஸ்தான்பிபாக்] [தாளம் ஏகம்

பல்லவி.

தீரன் ஸ்ரீபொன்னப்ப சிங்கமே (தீ)

அநுபல்லவி.

நாளுஞ் சிங்காரமாய் நமது
சங்காபிமானமுதிற்
சிந்தை சந்த தம்பொருந்துந் (தீ)

தொகைரு

இமயமொடுகேட அலகம் பெயரினும் வாய்மொழித்
திறமை பெயாாத பண்பன்
சிரேஸ்டமடையும்படி குலவிர்த்திக்கேதொண்டு
செய்யமுன்வந்த நண்பன்

முடுகுச்சந்தம்

சித்தத்தி கர்த்தத்துவ தித்தித்திடு சொல்லான்
குற்சைக்குண வற்பத்தொகு திக்குட்பட நில்லான்
எத்திக்குமதிக்கப் புகழ்மெச்சத்தகு வல்லான்
நகை யோகை யேகொள் போகன் (தீ)

தொகையறு

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
சாயாத நியாய துங்கன்
தமதுகுல மேன்மையைக் கருதியுடல் பொருளாவி
தத்தஞ் செய்யுமா தங்கன்

முடுகுசந்தம்

சந்தச்சரபத் தங்கம் வெள்ளைச்சாமி
சாற்றியசெந்தமிழ்க் கேற்ற நன்னேமி
சுந்தரஞ்சேர் விர்ஷதையம் பதிச்சேமி
தூய நேயோ பாயோ தார (தி)

## வெங்காடம்பட்டி ஸ்ரீமான் சி. இராசாமி நாடார்
செஷன் அஸஸர் க்ஷத்திரியக்கமிட்டி ஸ்கூல் தலைவர்

(அருட்கடல் என்ற தொகையறு மெட்டு)

இராகம் இங்கிலீஷ்டோன்] [தாளம் ஆதி.

பல்லவி

புவிக்கிந்த்ரன்போல் வைபவஞ்செறிந்தவன் இராமசாமிப்
புண்யன் காருண்யஞ் சிறந்தவன் (பு)

அனுபல்லவி

சவிக்குணபூசிதன் க்ஷத்ர்யக்குலோசிதன்
சர்க்கரைசீனியொக்கப் பேசிதன்—பெருந்
தன்மைநிலைத்திட நன்மைப்பொதுத்தர்மஸ்
தாபன் நிரு(ரூ)பன்விக் ஞாபன் லாபன்

தொகையறு

தங்குலப் பாலிகாப் பாலரும் பயின்றிடச்
க்ஷத்திரியச் சங்கஸ்கூலே
தமதரிய முயற்சியாற் கட்டிவைத்தாணவை
தான்விளங்குது மென் மேலே (பு)

அநுபல்லவி எடுப்பு

அழகிய செஷனிலே யசோதர்நெறியிலே
அன்பாய் நின்றுனதாற்றம் பதியிலே—தபா
லாபீஸெவருஞ்ச பாசெனவேவைத்த
அறிவாகரன் கிருபாகரம் நிறைநீர்மையுடன்

தொகையுரு

ஆண்டாண்டுதோறுந்தஞ் சொந்தநகராம்வெங்கா
டம்பட்டியிற் கூட்டமே
அமைந்துவைத்தான்றங்கம் வெள்ளைச்சாமிதமி
ழுலங்கலணிந்திட நாட்டமே (பு)

பூலாங்குளம் ஸ்ரீமான் சு. வைகுண்ட நாடார்

இருபிமானேபகாரன்

(அம்மாமதுரை என்ற தொகையுரு மெட்டு)

இராகம் பியாக்கு] [தாளம் ஆதி

கண்ணிகள்

தென்னாடெங்கும் புகழுந்தீரன்-பீ. எஸ்.
ஸ்ரீவைகுந்த பேரன் மிகுந்த
செல்வத்திற்கு பேரன்
திகழுமுபகாரன் தி தி (தெ)

தொகையுரு

சித்தாந்த வேதாந்த புராணேதிகாசமுந்
தேர்ந்த வைராக்கிய பூமான்
செம்மையொடு நமதுகுல முன்னேறவேதொண்டு
செய்யமுன் வந்த சீமான் (தெ)

ஷ கண்ணித் தொடர்

மின்னுமொளியுமிழ்முத் தாரன் க்ருபை
மிகும்ப ரோபகாரன் கல்வியை

விளங்க வைக்கும் வீரன்
விதுகுலச் சிங்காரன் வி. வி. (தே)

தொகையறு

வெறியான லாகிரிக் கள்த்தொழிலைநம்மவர்கள்
விட்டுவிடவே ப்ரசங்கம்
விடாவூக்கத்தோடுசெய் கின்றயிவனல்லவோ
மேவுக்ஷத்திரிய சிங்கம்

ஷை கண்ணித் தொடர்

விந்தையாயிவன்றனுமேல குலம்
மேன்மையாகுமினி மேலே தங்கம்
வெள்ளைச்சாமி நூலே
விளங்கிடு மென்மேலே வி. வி. (தே)

## சிவகாசி சின்ன முதலாளி
## ஸ்ரீமான் ப. செ. பால்த்துரைச்சாமி நாடார்

(கொந்தாரும் பூங்கணை என்ற மெட்டு)

ராகம் தேசிகதோடி.] [தாளம் ஆதி.

பல்லவி.

சாந்தகுணன் பால்த்துரைச்
சாமி சாமர்த்தியனே
சேம மேவிர்த்தியனே
நேம மார்சத்தியனே—ஸ்ரீமன் (சா)

அநுபல்லவி.

வாய்ந்த புவீந்த்ரன் வழங்குமுகாந்த்ரன்
மதிக்குமுத் தமிழ்ச் சிங்கம்
திசை யெங்கும்
புகழ் தங்கும்
படி பொங்கும் (சா)

குல மாசறப்புரி யோக்யன்
நல மேசெயச்சொலும் வாக்யன்
பர மானந்தவி லாசந்திகழ்
கோன்கந்தவி ஷேசந்தனே
வந்தின்பசு கந்தங்கிட
வென்றுங்கொளவுஞ்செய்சுப (சா)

மணித்தங்கநேமி மாவெள்ளைச்சாமி
மனமகிழுநன் னேசன்
விசு வாசன்
சுய ரோஜன்
மிகு தேஜன்
நனி மாட்சிமைச்சங்கஸ் தாபன்
இந்து திட்சண்யமதத் தாபன்
உயர் மாடஞ்செறிகூடம் பல
நீடுஞ்சிவ காசிநகர்
மன்னன்கொடை தன்னிலிவன்
கன்னனிக ரென்னுஞ்சுப (சா)

## மதுரை நாடார் மகாஜன சங்கம் வாழ்த்து.

(ஆனந்த மானந்த என்ற மெட்டு)

இராகம் இந்துஸ்தான்பியாக்.] [தாளம் ஆதி

பல்லவி

மாசங்கமேயென்று மேமின்திலங்குதே (மா)

அனுபல்லவி

மன்பதைக்கிடுக்கமற வின்புடன் சௌக்யமுற (மா)

சரணம்.

தேசநாகரீகத் திற்கிதுகாரணம்
சீர்திருத்தம்பல செய்யவுதாரணம்
வாசமிகுங்கல்விக் கோபணப் பூரணம்
வைத்தபிவிர்த்திந லத்தைமிகுத்துள (மா)

தொகைரு

சங்கம்வந்ததிலிருந் திந்தியா மீதிலே
சரியானமகிமை பெற்றோம்
பங்கமில்லாநீதிச் ஜியார்சராஜனுட்சியாற்
பாங்கானபெருமை யுற்றோம்

ஷ சரணம் எடுப்பு

பாரிற்சுயநலந் தேரிக்கொண்டாடவும்
பட்சமொடொற்றுமை யைத்தினநாடவும்
ஆரியத்தங்கம்வெள் ளாச்சாமிபாடவும்
ஆனந்த சேமங்க ளேபொங்குமே யெங்கும் (மா)

## ஐரோப்பா யுத்தத்தில் கார்பொரல் ஸ்ரீமான் வி. எ. அஸரியா நாடார்

நன்னபியாராரே என்ற மெட்டு)

இராகம் இந்துஸ்தான்தோடி] [தாளம் சாப்பு

பல்லவி

சற்குண வானஸரியா
தாணிமீதாருஞ் சரியா (ச)

அநுபல்லவி

விற்பனமான யோக்யன்
வீரதீரவை ருக்யன்
அற்புதஞ்சேர்சி லாக்யன்
ஆசீர்வாதநாமனின் பாக்யன் (ச)

தொகையரு

அஞ்சாமல் யுத்தத்திலே சென்றரிக் கொடியை
அசையாது நிலைநாட்டினன்
அனியாயமாய் வந்த ஜெர்மனியையோட்டியே
அன்றுதன் வலிகாட்டினன்

அநுபல்லவிஎடுப்பு

அழகிய ரெஜிமெண் பட்டா
ளத்தில் நூற் றைவற்குங்கர்த்தா
பழகியே விம்பிள்டன் கேம்பில்
பஸ்டாய் சர்ட்டிபிக்கெட் பெற்றான் (ச)

தொகையரு

பாண்டியன் மரபினர்கள் முன்னேறவேநல்ல
பக்குவங்கள் கண்டவன்
பண்பொடிங்க்லீஷ்மன்ன னன்பதனிலேமுழுப்
பங்கெடுத்துக் கொண்டவன்

அநுபல்லவி எடுப்பு

பத்தரை மாற்றுத் தங்கம்
பாஷ்யன் வெள்ளைச்சாமிச் சிங்கம்
நத்தியமே துலங்கும்
சுயம்பன் வயங்கொண்டிலங்கு முடம்பன் (ச)

## மதுரை நாடார் மகாஜன சங்க காரியதரிசி
## ஸ்ரீமான் மா. ச. மா. பொன்னுச்சாமி நாடார்

(செந்திற் குமாரவேளுண்டு என்ற மெட்டு)

[தாளம் ஆதி.
இராகம் சுருட்டி.]

பல்லவி.

பொன்னுச்சாமி யெனும் பூமான்
காரியதரிஸி (பொ)

அநுபல்லவி அடுக்குசந்தம்

புகழ்பெறு சங்கப்பி ரகடனமிஞ்சிய (பொ)

புழக்கமன்னிய சுயநலமிகவுயர்
குலத்துரிமைபழ கியநயஜெயஜெய (பொ)

புனிதப்படித் தியமாரிய வர
முறைமைக் கிரமப் படுசாரிய திர (பொ (மா)

புத்தித்தெளிவுப டைத்திச்சிறுவர்ப
டித்துக்குலமபி விர்த்திக்குதவிய (பொ)

போதத்துயர்வழி யாக்கியகோமான்
தீதுற்றிடுநெறி நீக்கியசீமான் (பொ)

சரணம்.

பொதுமைமக லோபகாரன்
பொங்குந்தர் மாவதாரன்
நிதிபெருகும் குபேரன்
நேர்த்தியா னசரீரன்

நிம்பத் தொடையணி கோகுல யோக்கியன்
தங்கக் கவிவெள்ளைச்சாமிசொல் வாக்கியன் (பொ)

மதுரை நாடார் மகாஜன சங்கக் காரியதரிசி
ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமி நாடார்

(எந்தன் சிங்காரக் கோகிலம் என்ற மெட்டு)

இராகம் பியாக்] [தாளம் ஆதி.

பல்லவி.

சாமிவிவேக தந்திரன்
சத்யன் பழனிச் (சா)

அநுபல்லவி.

நேமவிரதன் சங்கம்
நிர்வகிக்கப்ர சங்கம்
தாமதமின்றி யெங்கும்
தானேபுரிந்த சிங்கம் (சா)

தொகையறு

க்ஷேமமிகுசங்கத்தி லுண்டான செய்தியைத்
தேசமெங்கும் காட்டுவான்
தீமைதரு மெத்துமையாத பேயைவென்று
ஜியார்ஜுரிமை நிலைநாட்டுவான்

அநுபல்லவி எடுப்பு

ஜீவகா ருண்ய தேகன்
சித்தவை ராக்ய யோகன்
மாவெள்ளைச்சாமிஸ் நேகன்
மாராச்சுகரனு போகன் (சா)

## சென்னை க்ஷத்திரியமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் த. விஜயதுரைச்சாமிக் கிராமணி

(மயிலேவுன் சாயல்கொண்ட என்றமெட்டு.)

இராகம் இந்துஸ்தான் பியாக்] [தாளம் ஆதி.

பல்லவி.

சபாசுவிஜய துரை
சாமிபத்திரிக்கைமுறை (ச)

அனுபல்லவி

ஜெபாதி வேதமறை
சென்னையிற்சொல்லன்றே னுறை (ச)

சரணம்

சுபர்னந்தருமே ஸன்மார்க்கத்தைப்பொருமே
சோருதவன்வசனம் ஏருளப் பொன்பெருமே (ச)

தொகைரு

க்ஷத்திரிய மித்திர னெனும் பெயர்படைத்தவன்
சலியாதமனவு தாரன்
தரணிமிசை பகைவற்குச் சிங்கமெனவந்தவன்
சகலகலைவல்ல தீரன்

ஷை சரணம் எடுப்பு

சதாவும்வேதநன்னூல் சாற்றுசுகுணகான்சால்
தங்கம் வெள்ளைச்சாமிசொல் தமிழ்க்கேற்றநாமனதால் (ச)

## அருப்புக்கோட்டை நாடார் குலமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் திருவன் சூ. ஆ. முத்து நாடார்

(கபரிநகி என்ற மெட்டு)

இரர்கம் செஞ்சுருட்டி] [தாளம் ஆதி.

பல்லவி.

திருவன் முத்து சாமி
தேஜியத்திற் கோர்வித்து (தி)

அனுபல்லவி.

அருமுகனின் புண்ய னவதாரம்போன் றகண்யன் (தி)

சரணம்.

பெருமையுடநாடார்கள் பேணிக்கொள்ளுஞ்சமத்வ
உரிமைகொண்டாடவைத்த வுண்மைக்குழைககுஞ்சத்ய (தி)

தொகைரு

திறமையொடு தமதுகுல முன்னேற்றமடையவே
செய்தவைராக்ய பூமான்
தித்திக்குமுபன்யாச மழைபொழிந்தொற்றுமைத்
தீம்பயிர்வளர்த்த சீமான்

ஷ சரணம் எடுப்பு

க்ஷேமநாடார்குலமித் திரனென்னும்பத்திரிக்கை
மாமுறைமையன் வெள்ளைச்சாமிசொல் லேகம்பிக்கை (தி)

## மதுரை பாண்டியகுலதீபம் பத்திராதிபர் ஸ்ரீமான் க. சு. அருணகிரி நாடார்

(பக்திசாதிக்கவிடாது என்றமெட்டு)

இராகம் கமாஸ்] [தாளம் ஆதி.

பல்லவி.

பக்தனருணகிரிக் கோமான் குலப்
பான்மைக் குழைக்கவந்த சீமான் (ப)

அநுபல்லவி.

நித்தியமற நெறிதவராத
நிருபனுரிமைபெறக் கருதுபன்யாசநீத (ப)

சரணம்

பாண்டியகுலதீபப் பத்திரிக்கையாதிபன்
நீண்டபுகழ்சேர் தூபன் நேசமிகுஞ்சலாபன்
நிதான முஞ்செறி வாஞ்சையுமிஞ்சிய
சதானந்தங்கொளு மாண்டகையன்செய (ப)

தேசத்தில் நம்மவர்க்கே செய்வான்பிரசங்கம்
மாசற்றிடக்குலத்தின் மகிமைவிளங்கும்
மாதருலாவிய திரபுபாசல
வேதமொடாகம நூலறிவோனல (ப)

வித்வத்தங்கவிலாசன் வெள்ளைச்சாமிக்கவிராஜன்
நத்திப்புகழுந்தேஜன் நாளுமதுரைவாசன்
நயமிகுகற்பக தருவெனவிப்புவி
யதிலதியொத்துமை யதனைநிருத்திய (ப)

## சாத்தூர் தர்மசொரூபன் ஸ்ரீமான் அ. யா. வேலாயுதநாடார்

சரசக்ஷரமாமா என்றமெட்டு.

[தாளம் ஆதி.
இராகம் சுருட்டி]

பல்லவி,

விதரணகுண சீமான்
வேலாயுதக்கோமான் (வி)

அநுபல்லவி

என்றுமீமிசைநய சேமமிஞ்சிட
வேமுறைமைய தேபுரிந்திடும் (வி)

தொகையறு விருத்தம் மாதிரி.

விளம்பரிய யாபாரத்தாலவனிபுரக் தேபேர்விளக்கிப் போந்த
வளஞ்செறியுமானகரஞ் சாத்தூரிலோர் கூட்டம் வகுத்துநம்மோர்
உளம்பாவுமாறுநல்லமுன்னேற்ற வழியெல்லாமுறைத்தேயங்கு
விளங்குபஞ்சாயெத்தக்கமிட்டிச்சேர்மனாய் வீற்றிருந்த மேன்மையாளன்

பல்லவி எடுப்பு.

விது குல மதி பூகன்-உயர்
வேணிகர்க்ககதி ரேகன்-இன்னும்
வித்தியாபிவி ருத்திநாடிய வுத்தமபரி சுத்தனுகிய (வி)

தொகையறு விருத்தம்.

கலவரத்தையுண்டுபண்ணு மொத்துழையாத் தத்துவமாங்கசட்டுப் பேயின்
நிலைமையற்ற வுணர்ச்சிதனையடித் தோட்டிநம் மிந்த்யாநிலத்திற்கே யோர்
திலதமென விளங்கிரமக் கொற்றுமையே யுரிமையெனச்செய்தான் சீர்த்தி
நிலவுசிவகாசி நகர்தனிலுதித்துச் சங்கஞ்சேர் நிறைத்த பூமான்

ஷை பல்லவி எடுப்பு.

தமிழ்க்களஞ்சியத் தங்கம்-வெள்ளைச்
சாமிசெந்தமிழ்ச் சிங்கம் —தினஞ்
சாற்றியகவிக் கேற்றவிற்பனன் தேற்றமிக்கவு மாற்றலுற்றவன் (வி)

## சாத்தூர் ஸ்ரீமான் பி. பழனிவேல் நாடார் வக்கீல்

(எகரவொஸ்க மோதில என்ற மெட்டு)

இராகம் பியாக்கு] [தாளம் ஆதி.

கண்ணிகள்

பழனிவேல நாமனே குலாபிமானி
பழகும் நிதானி பகரும் மெஞ்ஞானி (ப)
பாகரமீதிலே புரியும் வியாக்யானி
பண்புள்ளமானி பணிக்கும்ப்ரதானி (ப)

தொகையறு

பார்லி மெண்டாரும்
சீர்மை கொண்டாடும்
நேர்மையும் பீடும்
ஆர்வமுங் கூடும்

பாட்டு.

பங்கமில்லாநேமி தங்கம் வெள்ளைச்சாமி

முடுகு

பவுஜுறப்புகல் நவரசத்தமிழ்
செவிசெலப்பெரி துவகைமுற்றிய (ப)

ஸ்ரீயான் அரி. அ. செ. கந்தசாமிநாடார் தூத்துக்குடி
(மாலையிலே தென்றல்சோலை எனறமெட்டு)

இராகம் இந்துஸ்தான்பியாக்] [தாளம் ஆதி.

கண்ணிகள்.

தேசாபிமானமொடி ராஜாபிமானமுள
தீரன் கந்தசாமியே நமக்குப
காரஞ்செய்யுஞ்சேமியே -- கல்வித்தேமியே (தே)

தொகையறு

சீராக வேநமது சங்கத்தீர்மானத்தைச்
சிரமேற்புனைந்த தென்பன்
திகழ்குலாபிவிர்த்திக்கே மனம்வாக்குகாயத்தைத்
தெத்தஞ்செய்திட்ட வன்பன்
ஷ கண்ணித் தொடர்.

செம்பாகு கற்கண்டு சீனியென்னும்படி
செப்புந்தேர்ந்த ப்ரசங்கன்-திசையெங்கும்
ஒப்புந் திண்டோளாண் சிங்கன்-ஜெயதுங்கன் (தே)

கேர்ஸாக வேபலநி யாயாதிகாரமுறைக்
கேயுழைக் கும்ப்ரசித்தன்-ஒத்துழையாப்
பேயை வெல்லுஞ் சமர்த்தன் (தே)

தொகையறு

கீழ்மைதருகள்த்தொழிலை நம்மவர்கள்விட்டுவிடக்
கெஞ்சிப் போதிக்கும்வீரன்
கோமிர்தத்தங்கம் வெள்ளைச்சாமிசொல்லைக்
கியதமிழணிந்த மார்பன்

ஷை கண்ணித் தொடர்

கெம்பீரவைபோக மும்பெருமங்காத
கீர்த்திப் பிரஸ்தாபனே—இந்துமதம்
பூர்த்திகொள்ளுந்தீபனே—மகிபனே (தே)

கோவிலூத்தூர் ஸ்ரீமான். வீ. சுப்ரமண்யநாடார் பிஏ. பிஎல்.

(மைக்கேர்தமேக்குருபான் என்ற மெட்டு)

இராகம் தேசிகம்] [தாளம் ஆதி

பல்லவி.

சாந்தகுணாலங் கிர்தன்
சகலபெருமை வாய்ந்த (சா)
தர்மராஜ நித்யகண்ய தைர்யதீர சுப்ரமண்ய (சா)

அநுபல்லவி

இந்தியாச் சொக்கத்தங்கம்
எங்கெங்குமே ப்ரசங்கம்
செய்த சிங்கம்

175919

இன்னல் நீக்கித் திருத்தி
இன்பவழியிற் புகுத்தி
தன்குலாபி விருத்தி
தனைப்புரிந் தார்
தர்மராஜ நித்யகண்ய தைர்யதீர சுப்ரமண்ய (சா)

தொகையறு

தமிழ் கிரந்தந் தெலுங் காங்கில மெனும் பெரிய
சாகரக் கரை கண்டவன்
தரணிமீதிற் சகோ ரத்துவசமத்துவந்
தன்னேபெண்ணூர் கொண்டவன்

அனுபல்லவி எடுப்பு

சங்கத்தி லபிமானன்
சார்ந்தகிதக் யானன்
தங்குந்த் யானன்
தங்கம்வெள் ளைச்சாமி
சாற்றுஞ்செந் தமிழ்நேமி
சந்ததம் புகழேமி
கவும் படைத்தார்
தர்மராஜ நித்யகண்ய தைர்யதீர சுப்ரமண்ய (சா)

## முக்கூடல் ஸ்ரீமான் த. பி. சொக்கலால் பீடிவர்த்தகர்

(பகாரியாலா என்ற மெட்டு)

இராகம் தேசிகதோடி] [தாளம் ஆதி.

பல்லவி.

ராஜவிஸ்வாசன் சொக்க
லாலேப்ர காசன்

அனுபல்லவி

தேசமெங்கு மேசிறந்த சீர்த்திபெற்ற சிங்கன்
செய்து பின்னிடாமனவுதார-துங்கன்
நாடார்—தேர்ந்த சங்கந்
தனிற்—சேர்ந்த அங்கன்—நாளுந்
திருத்தவேகுல விருத்தியையகக்
கருத்திலேலிகித திறுத்திடும் (ரா)

தொகையறா

சிறிவரும் வடநாட்டுச் சேட்டோடு விபகாரஞ்
செய்து ஜெயம் பெற்ற தீரன்
க்ஷேமமதை நம்குலத் தோரடைய வியாபாரத்
திறமைதனைக்கண்ட வீரன்

அனுபல்லவி எடுப்பு.

செல்வங்கல்விமல்குரல் முக்கூடல்நகர்வாசன்
சித்தசனுங்வெட்கங் கொள்ளச்செய் தநேசன்

பார்குஞ்—செரிந்த நேசன்
தரங்—தெறிந்த போஜன்—உயர்
தெலுங்குருகென் னடந்தமிழ்மரா
டிலங்குபார்வியும் புளங்குவல்லவன் (ா)

தொகைரு

தென்னாட்டுத்திலகமென வந்துநற்சைவமத
ஜீவகாருண்ய சித்தன்
செப்பும் வெள்ளைச்சாமி நற்றமி ழலங்கலைச்
சிரமேற் புனைசடர்த்தன். (ா)

# இராஜ வாழ்த்து.

(அள்ளிபள்ளிக் குடிக்கும் என்ற மெட்டு)

இராகம் பியாக்] [தாளம் ஆதி.

கண்ணிகள்.

எங்கும்புகழ்பி றங்குமங்காளி வேகமே
இங்கிலீஷ்ராஜரீகமே—வைபோகமே
இங்கிலீஷ்ராஜரீகமே—மகா
இன்பங்கொடுக்கு மன்புமிகுக்குந்
துன்பமகற்று மன்பதைகட்கே (எ)

சிங்கக்கொடிபறப்ப தெங்கும் ப்ரகாசமே
செங்கோல் மிகுந்த நேசமே—உல்லாசமே
செங்கோல் மிகுந்த நேசமே—எழு
தெண்டிரைதாண்ட ஸ்டீமரிலாஞ்சி
பண்டிநடக்கப் பாலமுரோட்டும் (எ)

தந்திதபாலிரயி லுந்துமோட்டார் ஸைகிள்
விந்தைசேரும் டிருவண்டி—ரப்பர்வண்டி
விந்தைசேரும் டிருவண்டி மிகு
தந்திரமான மென்சினுரோதை
சுந்திரமான நெல்லெண்ணெ மெஷின் (எ)

 175919 

புந்திமகிழச்செய்யும் போனக்ருப்பாண்டுகள்
அந்தரக் கப்பல் டெல்லிபென்—தையல்மிஷின
அந்தரக் கப்பல் டெல்லிபென் உயர்
பூதக்கண்ணுடி சூஸ்த்திரலாம்பு
நீதக்கச்சேரிஸ் கூலாஸ்பத்திரி (எ)

ஒப்பாருமின்றிமகிழ்ந் திப்பூமியாள்பவர்
நட்பாருஞ் ஜ்யார்ஜிமன்னவன்—விற்பன்னவன்
நட்பாருஞ் ஜ்யார்ஜிமன்னவன் குண
உத்தமியான பத்தினிமேரி
இத்தரைக்கெல்லாங் கொற்ற விராணி (எ)

செப்பார்தமிழ்க்கடலான் சிங்காரனுந்தெருள்
சேர்தங்கச்சாமி சீஷனும்—நன்னேசனும்
சேர்தங்கச்சாமி சீஷனும் கல்வித்
தேமியாம் வெள்ளைச் சாமியுரைத்த
தாமிதுமெய்யே பூமிதனிலே (எக்ள்

பெற்

## வாழி.

(ராஜருஜ என்ற மெட்டு)

இராகம் தோடி] தாளம் ரூபகம்-பின்முடு,

கண்ணிகள்.

வாழி வாழி வாழி வாழி வாழி வாழியே
மாமதிக்குலத்துதித்த மன்னர்களெஞ்ஞான்றும் வாழிே
மணம்பெறவே நாடார் மகாசங்கம் மாண்புடனே வாழி
மார்க்கமுடன் வருடந்தொறும் கூட்டமகாநாடும் வாழி
மகிமையுடனே தலைவர்களும் நஞ்செகரட்டெரிகளும் வாழி
மங்களக்கவித் தங்கம் வெள்ளைச்சாமி பாடல்
மானிலத்தினில் வாழி—இந்த
மானிலத்தினில் வாழி—இந்த
மானிலத்தினில் வாழி—என்றும் (வா)

## நற்றமிழ்த் திலகம் முற்றிற்று.

169/77

இன்னும் நமது குலாபிமானிகள் மீதியற்றிய பாடல்கள்
இரண்டாம் பாகத்தில் வெளிவரும்.

---

V. K. முத்துச்சாமி கவிராயர் அவர்களால் இயற்றிய
கிருஷ்ணா லீலா என்னும் "செந்தமிழ் நாடகம்"
விலை அணா 8.

இன்னும் அனேக தினுசு புஸ்தகங்களும் ஒன்பது ஆரூட புஸ்தகங்களும் ஞானக்கோர்வை, வைத்திய புஸ்தக முதலான து அடியிற்கண்ட விலாசதாரிடம் நேரிலும் வி. பி. மூலமாயும் றுக்கொள்ளலாம்.

கு. இராமசாமிக் கோன்

புஸ்தக வியாபாரம்,

புதுமண்டபம் மதுரை.